Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 237

யாழ்ப்பாணம் புரட்டாதி 20 ஷஃபான் 15 புதன்கிழமை (6-10-71)

இதோ வந்துவிட்டது!

நவீன நங்கையர் விரும்பும்
ரெறரேன்
பிளீற்றெட் ஸ்கேட்
வகைகளுக்கும்
பிளீற்றெட் புரேக்ஸ், மினிசிவ்ற்
வகைகளுக்கும்
ராஜ்கோபாலஸ்
(பிரபல ஜவுளி மாளிகை)
36/1, பெரியகடை — யாழ்ப்பாணம்

# பருத்தித்தீவில் பெட்ரோல்?
# ஆராய்ச்சிக் குழு நம்பிக்கை

## ஒரே ஒருகுடும்பமுள்ள அத்தீவில் குடியேற்றத் திட்டம் அமைக்கமுயற்சி

பருத்தித்துறை, செவ்

அனலைதீவுக்கு அருகிலுள்ள சிறு தீவான பருத்தித்தீவில் குடியேற்றத் திட்டங்கள் அமைப்பதுபற்றி நீரியல், உயிரியல் ஆராய்ச்சி சங்கக் குழுவினர் உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்கள். 3 மைல் சுற்றளவைக் கொண்ட பருத்தித்தீவுக்கு உயிரியல் நீரியல் ஆராய்ச்சிக் குழு ஒன்று அண்மையில் சென்றிருந்தது.

இத்தீவில் பெற்றோலியம் கிடைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக சந்தேகித்த இக்குழு ஆராய்ச்சிக்காக அங்குள்ள மண்ணில் சிறிதளவு கொண்டுவந்துள்ளது.

### ஒரேயொரு குடும்பம் வாழும் தீவு

இத்தீவில் ஒரே ஒரு குடும்பத்தினர் மட்டுமே வாழ்ந்து வருவதாகவும் இறிஸ்தவ தேவாலயம் ஒன்று இருப்பதாகவும் குழுவில் சென்றிருந்த ஓர் ஆசிரியர் தெரிவித்தார். வடமாநில விஞ்ஞானக் கல்வி அதிகாரி திரு எம் அற்புதநாளின் தலைமையில் இக்குழு அத்தீவுக்குச் சென்றிருந்தது.

### உப்புநீர் குடிக்கும் ஆடுகளில் பாலில்லை

நெருக்கமான முட்பற்றைகளும் மரங்களும் உள்ள இத்தீவில் நூற்றுக்கணக்கான ஆடுகள் அலைந்துதிரிவதாகவும் அவை உப்புநீர் குடிப்பதால் அவற்றில் பால் சுரப்பதில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்பொழுது அங்குள்ள குடும்பத் தலைவரால் பனம் கன்றுகள் ஆங்காங்கு நாட்டப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பயன்படுத்தப்படாத நிலையிலுள்ள இத்தீவில் சாத்தியமான ரீதியில் விஞ்ஞான முறைகளைக் கையாண்டு மீன்பிடி தொழிலை அபிவிருத்தி செய்யக் கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் இக்குழுவினர் தெரிவித்தனர்.

### நோய்வந்தால் மூலிகை மருந்து

இங்கு வாழும் குடும்பத்தினருக்கு நோய் வருவது அரிதென்றும் எப்பொழுதாவது சுகவீனமுற்றால் அங்குள்ள சில மூலிகைகளையே உபயோகிப்பதாகவும் மேலும் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் நடக்கவிருக்கும் யூனெஸ்கோ மாநாட்டில் பருத்தித்தீவு விஷயமும் ஒரு முக்கிய இடத்தைப் பெறவிருப்பதாகவும் குழுவினர் தெரிவித்தனர்.

## வழிகாட்டிகள் இல்லாததால் குற்றங்கள் அதிகரிப்பு

சங்கானை, செவ்வாய்

நாளுக்கு நாள் குற்றங்கள் அதிகரித்துவருகின்றன. குற்றங்களில் ஈடுபடுவதற்குக் காரணம் தகுந்த வழிகாட்டிகள் இல்லாமையே. சட்டத்தையும் சமாதானத்தையும் நிலைநாட்ட பொலிஸ் பகுதியினர் நியமிக்கப்பட்டுள்ளனர். நாட்டில் பெருகும் குற்றங்களை அவர்கள் தடுத்து நிறுத்துவதில் பாகுபாடின்றி கடமைபுரிவர்.

இவ்வாறு சங்கானை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அல்பிரட் செனவிரத்ன நிற்சாமம் வான்மதி இளைஞர் மன்றத்தின் 5வது ஆண்டு நிறைவு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துபேசுகையில் குறிப்பிட்டார். நிற்சாமம் வயிரவர் ஆலய முன்றலில் நடைபெற்ற விழாவிற்கு சங்கானை பட்டினசபை 4ம் வட்டார உறுப்பினர் திரு வி நாகலிங்கம் தலைமைதாங்கினர்.

பொலிஸ் அதிகாரி மேலும் பேசுகையில் கூறியதாவது: மக்கள் எப்படி நடந்தாலும் எனக்கென்ன என்ற எண்ணத்தில் இருத்தல்கூடாது தெரிந்தோ தெரியாமலோ தீயவழியில் செல்லும் ஒருவரை அவரும் மனிதனே என்றுஎண்ணி தடுத்துநிறுத்தி நல்வழிப்படுத்தல்வேண்டும். இதுவே நல்லோர் செய்யும் நற்கடனாக அமையும். அன்றேல் குற்றங்கள் அதிகரித்து நாட்டில் அமைதி குலையும். மக்கள் குறைகளை தீர்க்க மக்கள் ஊழியனாக பொலிசார் இருக்கின்றனர். ஆனால் சந்தேகக் கண்கொண்டு அவர்களை நோக்காது உங்களில் ஒருவனாக பொலிசாரை கருதி அவர்களுடன் ஒத்துழைத்தால் எதுவித கஷ்டங்களையும் தீர்க்க இலகுவாகும். எனவே உங்கள் ஒத்துழைப்பை வேண்டிக் கொள்கிறேன்.

சங்கானை பட்டின சபைத் தலைவர் திரு ஏ உயிரமுத்து பண்டத்தரிப்பு ப ச தலைவர் திரு எஸ் செல்வரத்தினம் உட்பட மற்றும் பலர் பேசினர். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியோர்க்கு திரு. அல்பிரட் செனவிரத்ன பரிசில்கள் வழங்கினர்.

கலைநிகழ்ச்சிகளுடன் நாடகங்களும் இடம்பெற்றன.

## "சகல கருமங்களையும் தமிழிலே ஆற்றுங்கள்"

### தமிழ் பேசும் மக்களை அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம் கோருகிறது

வெள்ளவத்தை, செவ்வாய்

'இன்றைய அரசாங்கம் தொழிற்சங்கங்களை நற்தொடர்புக்கு ஏதுவாகவும் திறமையான பரிபாலனம் நடாத்துவதற்கு உதவும் கருவிகளாகவும் கருதுகின்றது. அமைச்சர்களின் கதவுகள் தொழிற்சங்க அலுவலர்களுக்காக எப்போதும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. அமைச்சர்களையும் நிரந்தரச் செயலாளர்களையும் எப்போதும் காணமுடிகிறது. இந்த நாட்டின் தொழிற்சங்கவாதிகளுக்கு இது ஒரு நல்ல சகுனம்'.

இவ்வாறு கொழும்பு வை. எம் ஸி ஏ மண்டபத்தில் நடைபெற்ற அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் 10 வது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் திரு இ அந்தோனிப்பிள்ளை தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

(6-ம்பக்கம் பார்க்க)

ஏழாலைக் கிராமசபை

## புதிய தலைவர் மீதும் நம்பிக்கையில்லையாம்

மானிப்பாய், செவ்

ஏழாலைக் கிராமசபைத் தலைவர்மீது நம்பிக்கை இல்லை என்று 10 அங்கத்தவர்கள் கையெழுத்திட்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

மேற்படி கிராமசபையின் தலைவரான திரு. எஸ். துரைராஜாமீது நம்பிக்கையில்லையென்றும் எனவே விசேஷ கூட்டம் ஒன்றைக் கூட்டும்படியும் மேற்படி சபையின் 10 அங்கத்தவர்கள் சேர்ந்து உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. நல்லைநாதனைக் கடிதமூலம் கேட்டுள்ளனர். இச்சபையின் மொத்தஉறுப்பினர் தொகை 19 பேராகும். இதுபற்றி ஆராய இம்மாதம் 5-ம் திகதி விசேடகூட்டம் சபையில் நடைபெறும் என்று ஆணையாளர் அங்கத்தவர்களுக்கு அறிவித்துள்ளார்.

முந்திய தலைவரான திரு. க. சிவகுருமீது சென்ற 2, 3 மாதத்துக்குமுன் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்து அவரைப் பதவி இறக்கி துரைராஜா தலைவரானது குறிப்பிடத்தக்கது.

ஐ. நா. வில் இலங்கைப்பிரேரணை

## 'இந்து சமுத்திரத்தை அமைதிப் பிரதேசமாக்க வேண்டும்'

நியூயோர்க், அக் 5

இந்து சமுத்திரம் அமைதிப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்ற பிரேரணையை ஐ. நா. வின் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என இலங்கை கோரியிருக்கிறது.

ஐ நா பொதுச் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் திரு ஷேர்லி அமரசிங்க மேற்படி கோரிக்கையை விடுத்திருக்கிறார்.

பொதுச் சபை விவாதங்களில் இப்பிரேரணையை மிக முக்கியமான அம்சமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என திரு அமரசிங்க கோரியுள்ளார்.

இந்து சமுத்திரத்தில் தாக்குதலுக்கு அல்லது பாதுகாப்புக்குப் பயன்படுத்துவதற்கான ராணுவ நிலைகள் யாவும் அகற்றப்படவேண்டும் என்று இலங்கை கோரியிருக்கிறது.

பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா இன்னும் இரண்டு வாரங்களில் ஐ நா வுக்குச் செல்லக் கூடுமென்றும் அங்கு உரைநிகழ்த்துகையில் இதையும் வலியுறுத்துவாரென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஒட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gearwheel cutting) என்ஜினியரின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெஷின் கொம்பனி 95. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3625

அசல் பட்டுச் சேலைகள் அனைக்கேற்ற பட்டுப் பிளவுசுகள் இன்னும் எல்லாப் பட்டுவகைகளும் கிடைக்குமிடம்:- வசந்தபுரம் சில்க்ஸ், 7, 2-ம் ஒழுங்கை பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். ஓடருக்கும் செய்து கொடுக்கப்படும் 3639

### தேவை

அனுபவம் வாய்ந்த சினிமா ஒப்பரேட்டர் தேவை. சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 3640, C/o 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 3640

### தேவை

30 வயதுக்கு மேற்படாத ஆங்கில அறிவும் மேற்பார்வை (Supervising) அனுபவமுள்ள ஒருவர் தேவை. பிணைப்பணம் ரூபா 3000/- கட்டுதல் வேண்டும். வயது, படிப்பு, அனுபவம் மற்றும் விபரங்கள் அடங்கிய விண்ணப்பம் 12.10.71க்கு முன் அனுப்பிவைக்கவும். கி. ஆர். எஸ். என்டர்பிரைசஸ், 390, 392 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 3645

நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்திற்கு அனுபவமுடைய பிராமண குலத்தவரான பூசகர் தேவை. இலவசமான வீட்டு வசதிகளுடன் தகுதியானசம்பளமும் இதர வருமானங்களும் உண்டு. சகல விபரங்களுடனும் விண்ணப்பிக்கவும்: ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி. 3644

### விற்பனைக்கு

1966 தொடக்கம் 1970 வரையுள்ளபகுதி I, பகுதி II 5 வருட கேள்வித்தாள்களுக்கு முற்றிலும் மறுமொழி எழுதப்பட்டு B. Sc. (Honours) பட்டதாரியாக் உயிரியல்நூல் தமிழில் வெளிவந்துள்ளது. இப்பிரதியை உடன் வாங்கி உயிரியலில் விசேஷ சித்திபெறவும். பிரதிகள் கிடைக்குமிடம்: 50. ஜெதாலாறு ரோட், கொழும்பு 14. R செல்லையா & கொம்பனி, 158. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். விலை ஒன்று ரூபா 10/- தபாற் செலவு 75 சதம். தொகையாக வாங்குபவர்களுக்குவிசேஷகழிவுகொடுக்கப்படும். 3641

### நாகம்ஸ்சினிமா

கன்னாகம்

தினசரி: 4-30 மட்டும்
சனி, ஞாயிறு 10-30

SPY WITH MY FACE

(சண்டைப்படம்)

தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30

சிந்தாமணி

### வெலிங்டன்

### வெல்லிசினிமா

பி ப 2-30, 6-30, 10-00

எம்.ஜி ஆர்-சரோஜாதேவி எம் ஆர்ராதா-கண்ணாம்பா நடித்த

நீதிக்குப்பின் பாசம்

(புதிய கொப்பி)

RAJAH (Jaffna)
Daily 10-30, 4-45
7-00 & 9-45
Alan Delon
in
THE GIRL ON A MOTOR CYCLE
(for adults-color)

MANOHARA
Jaffna
Daily 4-45, 7&9-45 p.m.
Sat, Sundays 10-30
Robert Stack
Bibi Andersson
in
STORY OF A WOMAN
(adults only)

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p. m.
Sat. Sunday 10-30
Peter Ustinov
in
Walt Disney's
BLACK BEARD'S GHOST (Color)

தினசரி 2-00, 10-00
எம்ஜிஆர்- சரோஜாதேவி நாகேஷ் நடித்த

ஆசைமுகம்

### விற்பனைக்கு

ராதா பிவல் டானிக்: இரத்த சுத்தி, இரத்த விருத்தி. தாதுபுஷ்டி மருந்து. சோம்பல் பலவீனம். நரம்புத் தளர்ச்சி, பசியின்மை முதலிய நோய்களுக்கு சிறந்த நிவாரணி. ஜஸ். சுப்பிரமணியம் கொம்பனி, மருந்துக்கடை, யாழ்ப்பாணம், கொழும்பு. 3624

மிகவும் நல்ல நிலைமையில் உள்ள 1ஸ்ரீ 9000 தொடரிலுள்ள மொறிஸ் 1000 விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு A. வேரம்பலம் அன்சன்ஸ் 3 விராவ்லி ரோட் யாழ்ப்பாணம். 3647

சயிக்கிள், தையல்மெஷின்: ஆங்கில தட்டச்சு யந்திரம் தவணைமுறையில் விற்பனைக்கு உண்டு. நல்ல நிலைமையில் உள்ள சயிக்கிள் அரிசியில் தேவை. நேரில் அல்லது கடிதமூலம் தொடர்புகொள்ளவும்: கைத்தொழில் விவசாய கழகம் (Agricultural & Industrial Corporation) 253. ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 3643

### வேலை தேவை

அரசாங்கத்தில் இருபது வருடம் சேவையாற்றிய அப்போதிக்கரி, தனியார் துறை டிஸ்பென்ஸரி அல்லது ஆஸ்பத்திரிகளில் தினச்சம்பளத்திலும் கடமையாற்ற விரும்புகிறார். விண்ணப்பிக்கவும்: [illegible] C/o 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 3642

### ஹாட்லிக்கல்லூரி பழையமாணவர் சங்க

## வருடாந்தக் கூட்டம்

கூட்டம் கல்லூரியில் 17-10-71-ம் திகதி நடைபெறும்.

நிகழ்ச்சிகள்:

காலை 8-00 மணி:- கிரிக்கெட், ரெனிஸ் போட்டிகள்.

பகல் 12-30 -மதிய போசனம்.

மாலை 4-00:- வருடாந்தப் பொதுக்கூட்டம்.

மாலை 4-30:- உதைபந்தாட்டப்போட்டி - தேநீர் விருந்து.

மதிய போசன டிக்கெட்டுகளை இம்மாதம் 14-ந் திகதி வரை நபருக்கு ரூபா 5/- சங்கச் செயலாளர்களிடம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள விரும்பும் பழைய மாணவர்கள் தொடர்பு கொள்ளவும்.

கிரிக்கெட்: திரு. சி. பாலசிங்கம், அல்வாய், ரெனிஸ்: திரு. ரத்னவேல், பருத்தித்துறை, உதைபந்தாட்டம்: திரு: எஸ். ராஜலிங்கம். பொறியியலாளர், கரணவாய், உடுப்பிட்டி.

டபிள்யு.என்.எஸ். சாமுவல்
ஆர் எஸ். இராமநாதன்
இணைச்செயலாளர்கள்.
3058

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## கேள்வி அறிவித்தல்

1-1-1972 தொடக்கம் 31-12-1972வரை குத்தகைக்குக் கொடுக்கப்படவிருக்கும் பின்வருவனவற்றிற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 15-10-71-ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 3-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்

1. பெரியகடை மரக்கறிச் சந்தையிலுள்ள 5 ஏ, 37 ஏ, 44, 45ஏ. 81, 97, 106 ஆகிய எண்ணுள்ள முழுக் கடைகள்.

2. பெரியகடை மரக்கறிச் சந்தையிலுள்ள 37, 47ஏ, 58 ஏ, 87ஏ, 89, 89ஏ ஆகிய எண்ணுள்ள அரைக் கடைகள்.

3. 103, 117 என் கொண்ட முக்கால் கடைகள்.

4. பாஷையூர் சந்தையிலுள்ள இரண்டு கடைஅறைகள்,

5. பெரியகடை பஸ் நிலயம் முன்பாகவுள்ள தகரக் கடை இல 18.

கேள்விப்படிவங்கள் 14-10-71ந் திகதி வியாழக்கிழமை பி. ப 3-00 மணிவரை வழங்கப்படும். கேள்விப்படிவம் ஒன்றின் விலை ரூபா 5/- கேள்வியுடன் இணைக்கப்பட வேண்டிய பிணைப் பணம் ரூபா 15/-

இதர விபரங்களை மாநகராட்சி மன்றத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்றம்,
யாழ்ப்பாணம்,
5-10-1971. 3060

### நாவலர் பாடசாலையில்

## இலவச பண்டித வகுப்பு

யாழ்ப்பாணம், புதன் வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நாவலர் தருமகர்த்தா சபையாரால் நடாத்தப்படுகின்ற தமிழ்ப் பண்டித பாலபண்டித வகுப்புக்கள் நடைபெற்று அண்மையில் அப்பரீட்சை நடந்து முடிந்தமையால் அடுத்து 1972—73-ம் ஆண்டுகளில் நடைபெறும் பரீட்சைக்குரிய பாட வகுப்புக்களும் ஆகமக்கிரியா சம்ஸ்கிருத வகுப்புக்களும் ஆரம்பித்து நடைபெற்று வருகின்றன. இலவசமாக நடைபெறும் இவ் வகுப்புகளில் தமிழ்ப்பகுதி வித்துவான் திரு. ந. சுப்பையபிள்ளை தலைமையிலும் சம்ஸ்கிருதப்பகுதி பிரமஸ்ரீ இ. சீதாராம சாஸ்திரிகள் தலைமையிலும் நடைபெறுகின்றன.

வாரந்தோறும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் தவணை விடுமுறை நாட்களிலும் காலையில் தொடங்கி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ......


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள், ஜெய்சங்கர் — விஜயலலிதா நடித்த

நூற்றுக்கு நூறு

மகத்தான 3வது வாரம்

லிடோ [யாழ்நகர்] (காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30)
கிங்ஸ்லி (கொழும்பு)

ஜெமினி
வாணிஸ்ரீ
முத்துராமன்
மற்றும் மலர் நடித்த



தபால்காரன் தங்கை


கடைசி 2 தினங்கள்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00

தெய்வ மகன்



சிவாஜி
[3 மாறுபட்ட வேடங்களில்]
ஜெயலலிதா
நம்பியார் — நாகேஷ்
சுந்தரராஜன்
நடித்தது.



வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினிகணேசன்
சௌகார்ஜானகி
(இரு வேடங்களில்)
ரவிச்சந்திரன்
எம். ஆர். ஆர். வாசு
வி. எஸ். ராகவன்
பேபி ராணி
நடித்த

காவியத் தலைவி

கதை-வசனம்-டைரக்ஷன்: கே. பாலசந்தர்

## கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு விசேஷ சலுகைகள்

கொழும்பு, செவ்
"கூட்டுத்தாபனங்களின் டைரக்டர்களாகவோ நிர்வாக உத்தியோகத்தராகவோ கடமையாற்றும் அதிகாரிகளுக்கு ஆகக்கூடிய பக்சம் மாதாந்த சம்பளமாக இரண்டாயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும்."

கூட்டுத்தாபன ஊழியரின் சம்பளம்பற்றி ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட விசேட குழுவினர் தமது அறிக்கையில் இவ்வாறு சிபார்சு தெரிவித்துள்ளனர்.

சகல கூட்டுத்தாபன ஊழியர்க்கும் அவர்கள் மேலதிகமாகச் செய்யும் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் ஒன்றரை மணித்தியாலத்திற்கான ஊதியம் வழங்கப்பட வேண்டுமெனவும் விசேட லீவுடையும் சம்பளத்துடன் கூடிய 30 நாட்கள் விடுமுறையும் 18 பௌர்ணமி 7 விசேட விடுமுறை தினங்களும் வழங்க வேண்டுமெனவும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இதைவிட வேலைநேரம் சகல ஊழியருக்கும் சமமானதாக இருத்தல் வேண்டும் எனவும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. (சி பி ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய அரபுக்குடியரசு சம்மேளனத்தின் எகிப்திய அதிபர் சதாத் முதல் தலைவராகத் தெரிவு

கெய்ரோ அக்டோபர் 5

எகிப்து, சிரியா, லிபியா ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்து அமைத்துள்ள ஐக்கிய அரபுக்குடியரசு சம்மேளனத்தின் முதலாவது தலைவராக எகிப்திய அதிபர் அன்வர் சதாத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

இம்மூன்று நாடுகளின் தலைவர்களும் சந்தித்து நடத்திய உச்சிமாநாட்டில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டது. சிரியா அதிபர் ஆஸத், லிபியா அதிபர் கேணல் கடாபி, எகிப்திய அதிபர் அன்வர் சதாத் ஆகிய மூவரும் ஐக்கிய அரபுக்குடியரசு சம்மேளனத்தின் முதல் தலைவராக யார் இருக்க வேண்டும் என்பது பற்றி ஆலோசனைகள் நடத்தினார்கள். இந்த ஆலோசனைகளின் பின்னர் சம்மேளனத்தின் முதலாவது தலைவராக எகிப்திய அதிபர் அன்வர் சதாத் இருக்கவேண்டும் என்றும், ஒவ்வொரு தலைவரும் இரண்டு ஆண்டுகளுக்கு பதவி வகிக்க வேண்டும் என்றும் முடிவு செய்தனர்.

அதன்பின்னர் மூன்றுநாடுகளதும் ராணுவ நிலைமை பற்றி தலைவர்கள் ஆலோசிக்கத் தொடங்கினார்கள். ஜோர்டானிலுள்ள நிலைமை பற்றியும் அவர்கள் ஆராய விருக்கிறார்கள்.

## மேற்காசிய அமைதியில் யு. எஸ். அரசு உறுதி

மேற்காசிய நெருக்கடிக்கு தீர்வுகண்டேயாக வேண்டுமென அமெரிக்கா உறுதி கொண்டிருக்கிறதென அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. வில்லியம் ரோஜர்ஸ் தெரிவித்தார்.

மேற்காசிய நெருக்கடிக்குத் தீர்வு காணுவதிலும் சூயஸ்கால்வாயைத் திறந்து விடுவதிலும் அமெரிக்கா நம்பிக்கை கொண்டிருக்கின்றது. சூயஸ்கால்வாய் சர்வதேச கப்பல் போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்டால் இருதரப்பினரும் பிரிந்துபோகவும், இஸ்ரேல் தான் பிடித்த இடத்திலிருந்து விலகிச் செல்லவும்வழி பிறக்கும் என்று திரு. ரோஜர்ஸ் கூறினார்.

மேற்காசிய நிலைமை குறித்து ஐ. நா. பாதுகாப்புசபை நிறைவேற்றிய தீர்மானத்தை இரு தரப்பினரும் அமுல்படுத்த முன்வரவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## உலக கிரிக்கட் கோஷ்டியில் இந்திய வீரர்

புதுடில்லி, அக். 4

எதிர்வரும் குளிர் காலத்தில் ஆஸ்திரேலியாவுக்கு செல்லவிருக்கும் உலகக்கிரிக்கட் குழுவில் பிரபல இந்திய கிரிக்கட் வீரர்கள் மூவரும் இடம்பெறுகிறார்கள். இவ்வருடம் டெஸ்ட் கிரிக்கட் போட்டிகளில் மேற்கிந்திய கிரிக்கட் கோஷ்டியையும் இங்கிலாந்து கிரிக்கட் கோஷ்டியையும் தோற்கடித்த இந்தியக் கோஷ்டிக்கு இப்பொழுது உலகில் நல்ல புகழ் ஏற்பட்டிருக்கின்றது.

ஆஸ்திரேலியா செல்லவிருக்கும் உலகக்கிரிக்கட் கோஷ்டியில் இந்திய வீரர்களான வேதி சுனில் காவஸ்கர், படூர் எஞ்சினியர் ஆகியவர்கள் இடம் பெறுகிறார்கள். உலக கிரிக்கட் கோஷ்டிக்கு மேற்கிந்திய வீரர் சோபர்ஸ் தலைவராகவும் பாகிஸ்தானைச் சேர்ந்த ஆலம் துணைத்தலைவராகவும் இருப்பர்.

## இன்று கருத்தரங்கு

யாழ்ப்பாணம், புதன்

யாழ். இலக்கிய வட்டத்தின் கருத்தரங்கொன்று இன்று மாலை நடைபெறவிருக்கிறது. யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மதுரகவி இ. நாகராஜன் தலைமையில் நிகழும் இக்கருத்தரங்கில் 'பாரதிக்குப் பின் தமிழ்க்கவிதை' பற்றி இரசிகமணி கனக. செந்திநாதனும், 'சிறுகதைகள்' என்னும் பொருளில் திரு க. இராஜநாயகனும், 'இன்றைய விமர்சனங்கள்' பற்றி கவிஞர் வே. குமாரசாமியும் உரையாற்றுவர்.

## பிரி. வெளி அமைச்சர் ரொடீஷியா செல்வார்?

லண்டன் அக் 5

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் சேர் அலக் டக்ளஸ்ஹியூம் விரைவில் ரொடீஷியாவுக்கு விஜயம் செய்யக்கூடும் என்று பிரிட்டனில் பலமான ஹேஷ்யம் நிலவுகின்றது.

ரொடீசியாவின் சுதந்திரம் பற்றிய பிரச்னை குறித்து ரொடீசிய வெள்ளையர் தலைவர் அயன்ஸ்மித்துடன் சேர் டக்ளஸ் ஹியூம் உயர்நிலைப் பேச்சுக்களை ஆரம்பிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## விமானத்தை திசைதிருப்ப முயன்ற இளம் பெண்

அம்மான், அக் 5

பெய்ரூட்டிலிருந்து அம்மானுக்குச்சென்றுகொண்டிருந்த ஜோர்டானுக்குச் சொந்தமான பிரயாணிகள் விமானமொன்றை பலவந்தமாகத் திசை திருப்பிக்கொண்டு போக முயற்சிசெய்த இளம் பெண் ஒருவர் மடக்கிபிடிக்கப்பட்டார்.

20 பிரயாணிகளுடன் போய்க்கொண்டிருந்த விமானத்தின் காப்டனை எறிகுண்டு ஒன்றைக்காட்டி பயமுறுத்திய இவ்விளம்பெண் விமானத்தின் திசையைத் திருப்பும்படி கோரினாராம் ஆனால் அவரை பாதுகாப்பு அதிகாரிகள் மடக்கிப்பிடித்து விட்டார்கள். அவருடன் போய்க்கொண்டிருந்த பாலஸ்தீனியர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டார். பின்னர் விமானம் பத்திரமாக அம்மானில் இறங்கியது.

## 13 மீனவர்களை காணவில்லையாம்

சென்னை, அக். 5

கடந்த மாதம் 22ம் திகதி சென்னைக் கடற்கரையிலிருந்து கட்டுமரங்களில் மீன் பிடிக்கச் சென்ற 13 மீனவர்களை இன்னமும் காணவில்லையாம். இவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும்படி சென்னைக்கருகாமையிலுள்ள கப்பல்கள் அனைத்துக்கும் தகவல் கொடுக்கப்பட்டுள்ளதாம்.

## வல்லிபுரத்தில் பூசை இல்லை

பருத்தித்துறை, செவ்.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் தேர்த்திருவிழா இவ்வாண்டு நடைபெறவில்லை. இத்தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்தது. கடந்த திருவிழாக்கள் இவ்வாலயத்தில் நடைபெறாததுடன் பூசைகளும் நடைபெறவில்லை. கோவில் கதவுகள் பூட்டப்பட்டுள்ளன. எனினும் வழக்கம்போல ... ரொக்கல் ... நடைபெற்றுவருகிறது.

பாக். தூதரக அதிகாரி

## விசுவாசத்தை மாற்றிக்கொண்டார்

புதுடில்லி, அக். 5

புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தின் மந்திரி நிலை அதிகாரியான அதிகாரியான உமாயுன் ரஷீத் சவுத்திரி என்பவர் வங்காள தேசத்துக்கு விசுவாசம் தெரிவித்து விலகிக்கொண்டுள்ளார்.

பாகிஸ்தான் ராணுவத்தினர் கிழக்குவங்காளத்தில் செய்யும் கொடுமைகளைப் பார்த்துக்கொண்டு அந்த அரசுக்கு ஆதரவாக இருந்தும் வங்காளியாக இருக்க முடியவில்லையென அவர் தெரிவித்துள்ளார். கிழக்குப் பாகிஸ்தான் மேற்குப் பாகிஸ்தானின் காலனியாக மாறிவருகின்றது எனவும் அவர் சொன்னார்.

இந்த தூதரகத்தைச் சேர்ந்த சிப்பந்தியொருவரும் ஏற்கனவே வங்காள தேசத்துக்கு விசுவாசம் தெரிவித்து இரகசியமாகத் தப்பிச்சென்றுள்ளார்.

## 'சகல ஆசிரியருக்கும் தொழிற் சங்க உரிமை வேண்டும்'

மாவிட்டபுரம், செவ்.

"நிர்வாகப்பொறுப்பில்லாத அரசாங்க ஊழியருக்கு அரசியல் உரிமைவழங்குவதென்ற அரசாங்கத்தின் திட்டத்திற்கமைய உதவி ஆசிரியர்களும் சில அதிபர்களும் மட்டும் தான் இந்த உரிமையைப் பெறுகின்றனர். விசேஷதரவகிப்பவர்கள் மற்றும் அதிபர்கள் அரசியல் உரிமை அற்றவர்களாகத் தொடர்ந்து இருப்பது முற்றிலும் ஏற்கக்கூடிய தொன்றல்ல. ஆகவே ஆசிரியர்கள் அனைவரும் இவ்வுரிமைபெற அரசு உதவவேண்டும்"

இவ்வாறு வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் திரு. சபாநடேசன் வருடாந்த மகாநாட்டில் சமர்ப்பித்த அறிக்கையில் கோரியுள்ளார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

"எமது சங்கத்தின் நீண்டகால கோரிக்கையான தேசிய பிரதேச ரீதியான இடமாற்றுச்சபை நிறுவுவது பற்றிய தீர்மானத்தை அமுல் செய்ய அரசு முனைந்துள்ளது இந்தசபை மூலம் ஏராளமான ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர். கல்வி இலாகா ஊழியர்களுக்கும், அரசியல் வாதிகளுக்கும் இச்சபை இடையூறாக இருப்பதால் இச்சபையை படிப்படியாக புறக்கணித்து அதனை கலைக்க முயற்சி செய்யப்படுகிறது. இறுதிவரை இச்சபையை கலைக்கவிடாது தொடர்ந்தும் இச்சபை இயங்குவதற்கு அரசை நெருக்குவது ஆசிரியர்கள் கடமை.

பதவியுயர்வுகள் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவுக்கு முன் ஆசிரிய சங்கங்கள் சாட்சியம் அளித்து பல வருடங்களாகிவிட்டன. ஆனால் இந்த விசாரணைக்குழு அறிக்கை வெளிவரவில்லை. ஆதலால் இவ்வறிக்கையை உடன் வெளியிடவேண்டும்.

ஆசிரியர்கள் அனைவருக்கும் ஒரே ஒரு சங்கம் அமைக்க இன்று முயற்சி எடுக்கப்படுகிறது

ஆசிரியர்கள் அனைவரும் ஒரே சங்கத்தில் அணிதிரண்டாலன்றி எமது கோரிக்கையைப் பெறவோ, எமது அந்தஸ்தை உயர்த்தவோ முடியாது"

கன்சர்வேடிவ் ஒப்பந்தப்படி பிரிட்டன்

## பொதுச் சந்தையில் சேர்வதற்கு தொழிற்கட்சி எதிர்ப்பு

### வருடாந்த மாநாட்டில் தீர்மானம் நிறைவேறியது

அல்ஜியர்ஸ் அக் 5

கன்சர்வேடிவ் கட்சி அரசு செய்துகொண்டுள்ள ஒப்பந்த அடிப்படையில் பிரிட்டன் ஐரோப்பிய பொதுச் சந்தையில் சேர்ந்துகொள்வதை எதிர்த்து பிரிட்டிஷ் தொழிற்கட்சி வருடாந்த மாநாடு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ... பொதுச்சந்தையில் பிரிட்டன் சேர்வது சம்பந்தமாக கன்சர்வேடிவ் கட்சியினர் செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் பிரிட்டனின் நலன்களுக்கு உகந்ததாய் இல்லையென தொழிற்கட்சி கருதுகின்றது. எதிர்காலத்தில் பதவிக்குவரும் தொழிற்கட்சிஅரசுகள் இந்த ஒப்பந்தத்தில் மாற்றங்கள் செய்யக்கோரவேண்டும் என்று சில முக்கிய அங்கத்தவர்கள் மாநாட்டில் ஆலோசனை தெரிவித்தனர்.

கன்சர்வேடிவ் அரசு செய்து கொண்டுள்ள ஒப்பந்தப்படி பொதுச்சந்தையில் சேர்வதை எதிர்க்கும் தீர்மானம் மகாநாட்டில் 5-1 என்ற பெரும்பான்மையுடன் நிறைவேறியது.

கிழக்குப் பாகிஸ்தானில் பாகிஸ்தான் ராணுவம்மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்றும் மகாநாட்டின் ஆலோசனைக்கு வரவிருக்கின்றது.

கிழக்குப் பாகிஸ்தானில் அங்குள்ள மக்களின் விருப்பப்படி அரசாங்கம் அமைய வேண்டும் என்றும் அத்தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கின்றதாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ் படையில் சேர

# இளம் பெண்களுக்கு மேலும் வாய்ப்பு

கொழும்பு, செவ். பொலிஸ் சேவையில் மேலும் 600 இளைஞர்களையும் இளம் பெண்களையும் சேர்த்துக்கொள்ள பொலிஸ் மாஅதிபர் திரு ஸ்டான்லி சேனநாயக்க முடிவு செய்திருக்கிறார்.

ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட இளம் பெண்கள் பொலிஸ் பயிற்சிக்காக அனுப்பப்பட்டுள்ளனர். மேலும் சுமார் 50 இளம் பெண்களை பொலிஸ் சேவையில் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படும் என்று தெரிகின்றது.

# பட்டதாரிகட்கு கடன் உதவி

கொழும்பு, செவ். வேலையின்றி இருக்கும் பட்டதாரிகட்கு சுமார் 10,000 ரூபா கடனாக வழங்க திட்ட அமைச்சு முன்வந்துள்ளது.

வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் விவசாயம் கைத்தொழில் வர்த்தகம் ஆகியவற்றை மேற்கொள்வதற்கே இவ் உதவி வழங்கப்படவிருக்கின்றது. இதன்படி பட்டதாரிகள் தாம் விரும்பிய தொழிலைச்செய்ய வாய்ப்பளிப்பதுடன் இதற்கு வேண்டிய நிதி சந்தைப்படுத்த வேண்டிய வசதிகளையும் அமைச்சு வழங்கும் எனவும் அறியப்படுகிறது. இது சம்பந்தமாக பட்டதாரிகளும் தம் திட்டங்களை தெரிவிக்கலாம் என்றும் அவை உசிதமானவை எனில் அரச நிதி உதவிகள் வழங்கும் என்றும் தெரிகின்றது. (சி பிஏ)

வட்டு. எம். பி. சொல்கிறார்

# வடபகுதி சுகாதாரம்: இலாகா புறக்கணிக்கிறதாம்

சங்கானை, செவ். "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்" என்ற வாக்கிற்கிணங்க மக்கள் அரசாங்கம் கைத்தொழில், கமத்தொழில், மற்றெழில் ஆகியவற்றிற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது. இந்நிலையில் இளைஞர்கள் முன்வந்து இதுபோன்ற தொழில்துறைகளில் ஈடுபட வேண்டும். அரசாங்கம் நிதிநெருக்கடியிலிருக்கும் இவ்வேளையில் தமது புதுத் திட்டங்களையும் செயல்படுத்திவருகின்றது"

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா சங்கானை அபிவிருத்தித் திட்டக் கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆரம்பத்தில் காந்தி ஜயந்தி தினத்தை நினைவுபடுத்தி காந்திமகானின் படத்திற்கு கதர் நூலிலான மாலை ஒன்றை எம் பி அணிவித்து மேலும் பேசுகையில் கூறியதாவது:

கடந்தகால அரசு விட்ட பிழைகளாலேதான் தற்போது பொருட்களின் விலையில் ஏற்றம் காணப்படுகிறது. பொருட்கள் வாங்குவதற்கில்லை இந்நிலை படிப்படியாக தற்போதைய அரசினால் நிவர்த்திசெய்யப்படும். கிராம அபிவிருத்தியிலும் அரசாங்கம் அக்கறைகொண்டுள்ளது இருந்தும் எதற்கும் அரசாங்கத்தை எதிர்பார்த்திருத்தல் கூடாது. புதிய திட்டங்களைப் புகுத்துவதாலும் சோலைகளை அதிகரிக்க வேண்டும். அப்போதுதான் திட்டங்களைச் செயற்படுத்த முடியும். மக்கள் இதற்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும். இவ்வேளை சுகாதார இலாகா வடபகுதி சுகாதார அபிவிருத்தியைப் புறக்கணித்து வருகிறது".

கருத்தரங்கை ஒழுங்கு செய்த திரு சந்திரசாமி, கல்வி சுகாதாரம் கமத்தொழில் பொழுதுபோக்கு போக்குவரத்து ஆகியவற்றில் புதிய திட்டங்களை வகுத்து மக்கள் பயன் பெறும் வகையில் நடைமுறைக்குக் கொண்டுவரல் வேண்டும் என்று கூறினார்.

இறுதியில் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய பத்தில் எம் பி நிழல்தருமரம் நாட்டுவிழாவை ஆரம்பித்து வைத்தார்.

## புதிய மந்திரி

புதுடில்லி, அக் 5 மத்திய அரசின் புதிய அமைச்சர்களில் ஒருவராக பேராசிரியர் நூருல்ஹஸன் இன்று பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டார். கல்வி சமுதாயநலத்துறை ஸ்டேட் மந்திரியாக அவர் பதவி ஏற்றுக் கொண்டார்.


# தம்பி அன் கோ.

ஆரம்பமாகி முப்பதாவது ஆண்டில்

ரூபா 1000/- ஜுபிலி சேமிப்பிறகு (Jubilee Deposit)

ஆறு ஆண்டுக்குப்பின் ரூபா 2000 கொடுக்கப்படும்

ரூபா 500/- ஜுபிலி சேமிப்பிறகு (Jubilee Deposit)

ஆறு ஆண்டுக்குப்பின் ரூபா 1000/- கொடுக்கப்படும்

இடையில் இச்சேமிப்பை எடுத்தால் வருடம் 8 சதவீத வட்டியுடன் கொடுக்கப்படும்

மறுவிபரங்கட்கு:-

தம்பி அன் கோ.

வண்ணார்பண்ணை ... திருநெல்வேலி

யாழ்ப்பாணம்.


தோட்டங்களிலிருந்து

# இந்தியாதிரும்புவோருக்கு பதில் சிங்கள இளைஞர்

கோட்டை, செவ். மலைநாட்டு தோட்டங்களில் தொழில் புரிந்துவந்த இந்திய வம்சாவழியினர். இந்தியாவுக்குச் செல்வதால் ஏற்படும் காலி இடங்களை சிங்கள இளைஞர்களைக் கொண்டு நிரப்புவதற்கான ஏற்பாடு ஒன்றை அரசு செய்துள்ளதாம்.

இலங்கையிலிருந்து இந்தியா செல்லவிருக்கும் இந்தியர்களில் இரண்டுலட்சம் பேர்வரை தோட்டப்பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று அரசு கணக்கெடுத்துள்ளதாம். இவர்கள் பகுதிபகுதியாக இந்தியாவுக்குச் செல்லும்போது ஏற்படும் காலி இடங்களை சிங்கள இளைஞர்களைக் கொண்டு நிரப்பிக்கொள்வதில் தடைபேதும் ஏற்படாதவகையில் திட்டமிட்டு தொழில் வசதி அமைச்சு ஏற்பாடுசெய்துள்ளதாம்.

இவ்வாறு வேலைவசதி பெறும் சிங்கள இளைஞர்களுக்கு தொழிற்சங்க உதவிகள் கிடைக்கவும் விசேஷ விடுமுறைகள் மற்றும் வசதிகள் கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்படுமாம்.

'தவஸ' பத்திரிகையில் இச்செய்தி வெளியாகியுள்ளது.

## இன்றைய பலன்

புரட்டாதிமாதம் 20-ந்திகதி (6-10-71)

மேடம்- கொடுக்கல் வாங்கல்மூலம் ஏமாற்றம் அடையநேரிடும். தொழில் துறையிலும் தொல்லைகள் தோன்றிமறையும்.

ரிஷபம்- பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள். இதன்மூலம் பல சௌகரியங்களுக்கு இன்று அதிர்ஷ்டதினம்.

மிதுனம்- பெரியவர் ஒருவருடன் அபிப்பிராயபேதம் தோன்றகூடும். ஆத்திர உணர்ச்சியால் மோதல்கள் ஏற்படக்கூடும்

கடகம்- எதிரிகள் கூட உங்களை வரவேற்பார்கள். மருத்துவத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு இன்று மகத்தான தினம்.

சிம்மம்- நீண்டநாள் பிரச்னை இன்று நல்ல முடிவுக்கு வரும். வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சியைத் தேடித்தரும் செய்தியும் இன்று கிடைக்கும்.

கன்னி- பெரியவர் ஒருவருடன் பகைத்துக்கொள்ள நேரிடும். எதிலும் முன்யோசனை விரும்பத்தக்கது.

துலாம்- குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை தென்படும். காதல்வானில் சஞ்சரிப்பவர்களுக்கு கனிவான நிகழ்ச்சிகள் உண்டு.

விருச்சிகம்- சூழ்ச்சியின் உச்சகட்டம் வேதனையில் வீழ்த்திவிடும். ஆழ்ந்த சிந்தனையுடன் காரியத்தில் கண் வைப்பீர்.

தனு- தெய்வத்தின் அருளும் உண்டு. இலட்சியப் பாதையில் புதிய முன்னேற்றம் காணப்படும்.

மகரம்- விருந்தினர் வருகையுடன் வேடிக்கை பலவுண்டு. இதயப்படுதாவில் இன்பத்தின் மின்னல்.

கும்பம்- துணைவியை துணைகொண்டு காரியங்களைச் சிறப்பாகச் செய்வீர்கள். பொதுசனத் தலைமையுடன் புகழும் தேடிவரும்.

மீனம்- ஆதரவுகொடுத்தவரே முடிவில் கைவிரிக்கக்கூடும். கடன் தொல்லை அதிகரிக்கலாம் நிதானம்வேண்டும்.

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலும்பிள்ளை

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் (6-10-71)

(செய்திகள்: காலை 6-30. பகல் 12-45 மாலை 6-00. இரவு 9-00)

294 மீ ஆண்டு 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 பொதுமன்றம், 7-15 நதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை 8-00 இசை வேளை, 8-15 இஸ்லாமிய பாடல்கள்.

6-10 இடைவேளை இசை, 6-15 கத்தோலிக்க நிகழ்ச்சி-அருள்வாக்கு, 6-30 பாட்டு. 7-00 இராமசஞ்சிகை, 7-15 திருக்குறள்வகுப்பு, 7-30 சாஸ்திரியஇசை 7-45 நாடகம் 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி 8-05 அரபுப்பாடம் 8-15 கடமை கதைக்கசம் 8-40 இஸ்லாமிய பாடல்கள் 8-55 [illegible] 9-40 [illegible] 10-30 செய்தித் தொகுப்பு.

# 'தமிழக அரசு காந்திஜிக்கு அவமானம் ஏற்படுத்திவிட்டது'

மாவிட்டபுரம், செவ். "விடுதலைக்காகப் போராடிய அண்ணல் காந்திக்கு நாம் விழா எடுத்தால் மட்டும் போதாது. அவரது லட்சியங்களைக் கடைப்பிடித்து ஒழுகுதல்வேண்டும்" என்று தியாகி கோ. இராஜகோபால் மாவிட்டபுரத்தில் நடைபெற்ற காந்தி நினைவு தினவிழாவில் பேசுகையில் கூறினார்.

மாவை அருள்நெறிமன்ற ஆதரவில் நடைபெற்ற இவ் விழாவுக்கு கோப்பாய் வட்டார வித்தியாதரிசி திரு. வே. சண்முகநாதன் தலைமை வகித்தார்.

அருள் செ. குணபாலசிங்கத்தின் தேவாரத்துடன் விழா ஆரம்பமானது காந்தியுடன் சுதந்திர விடுதலைப் போரில்பங்குகொண்டுசிறை சென்றவரும், திருமலை காந்திசேவாசங்கத் தலைவருமான தியாகி ராஜகோபால் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'மக்களுக்குப் பெரிதும் தீமை விளைவிக்கும் மதுவை ஒழிப்பதற்காக அல்லும் பகலும் போராடிய அண்ணல் காந்தி மதுவிலக்குச் சட்டம் இயற்றவேண்டுமென விரும்பினார். அவரது விருப்பம் நிறைவேறிச் சட்டமாக்கப்பட்டு சென்ற 30 ஆண்டுகளாக மதுவிலக்கப்பட்டு வந்தது. ஆனால் காந்தியின் இலட்சியங்களைக் கடைப்பிடிக்கிறோம் என மேடைகளில் முழங்கும் தமிழக அரசினர் அவருக்கு அவமானம் ஏற்படும் வகையில் மதுவிலக்குச் சட்டத்தை ரத்துச் செய்துள்ளனர். வள்ளுவரின் குறள்களை தமிழகத்திலுள்ள எல்லா இடங்களிலும் எழுதிய தமிழக அரசு வள்ளுவரையும் அவமதிக்கும் வகையில் மதுவிலக்கை ரத்துச் செய்துள்ளது. இதனைச் செய்துவிட்டு தமிழக அரசு கேலிக்கிடமான விஷயம் ஒன்றையும் செய்துள்ளது. மதுவிலக்கை ரத்துச்செய்துவிட்டு மதுவிலக்கைப்பற்றி பிரசாரம்செய்ய எம் ஜி ஆர் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஆயர்பாடி சோதிடர் வே த மயில்வாகனம், அருள் செ குணபாலசிங்கம் திருமதி வேதவல்லி கந்தையா உட்பட பலர் உரையாற்றினர் கலாநிதி க. ஞானேந்திரன் நன்றி தெரிவித்துப் பேசினார்.

## இருவர் பதவி உயர்வு

யாழ்ப்பாணம், புதன் வடமாநிலக் கல்வி அலுவலக நிதிக்கிளையின் பிரதான குமாஸ்தாவான திரு செ. துரைசிங்கம் முதலாந்தரத்திற்குப் பதவி உயர்வு பெற்றுள்ளார். இவர் வடமாநிலக் கல்வி அலுவலகப் பொழுதுபோக்குச் சங்கத்தின் அனுதிகாரியும் எழுத்தாளர் சங்க யாழ். கிளை உப தலைவரும் ஆசியாலை மேற்கு ச. ச. நிலையத்தின் உப தலைவருமாவார். இவர் ஒரு சிறந்த சாரணர் என்ற முறையில் 56ம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற சாரணர் விழாவில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.

இதே காரியாலயத்தில் கடமையாற்றும் திரு செ. திருநாவுக்கரசுவும் முதலாம் தர எழுதுவினைஞராகப் பதவிஉயர்வுபெற்றுள்ளார் இம்மாதம் 15ம் திகதியிலிருந்து அனுராதபுரம் கல்விக் காரியாலயத்தில் திரு திருநாவுக்கரசு நிதி உதவியாளராக நியமனம் பெற்றுள்ளார்.

## நிலையைஉயர்த்திய பிரதமர்

அக்குரெஸ்ஸ, செவ் "இந்நாட்டில் கீழ் நிலையில் வைத்து நசுக்கப்பட்டுவந்த பெண்ணினம் இன்று நாட்டின் ஆட்சிப்பொறுப்பிலும் கூட முக்கிய பங்கு ஏற்கும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. இந்நிலையை உருவாக்கித் தந்தவர் நமது பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கதான் அவரது பெயர் இந்நாட்டின் பெண்கள் மத்தியில் என்றென்றும் பாராட்டப்படுவது திண்ணம்"

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அக்குரெஸ்ஸ கிளையின் முக்கியஸ்தர்களில் ஒருவரான ஆரிய புலோ கொட கூறினார்.

அக்குரெஸ்ஸையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பெண்கள் கிளையொன்றை நிறுவுவதற்காக நடைபெற்ற கூட்டத்தில் அவர் பேசினார்.

## திருப்பணிநிதி

கொடிகாமம், செவ். "திருக்கேதீஸ்வரத்திலின்னும் சில கட்டிடங்கள் பூர்த்தியாகவேண்டிய நிலையிலுள்ளன. பொதுமக்கள் இந்த நற்பணிக்கு தாராளமாக உதவவேண்டும். நாம் ஒவ்வொரு வீடுகளுக்கும்சென்று நிதிசேர்க்க முடிவுசெய்துள்ளோம்".

திருக்கேதீஸ்வரதிருப்பணி சபையின் கூட்டம், கொடிகாமம் திருநாவுக்கரசுவித்தியாலயத்தில், நடந்தபோது சபைத்தலைவர் திரு. ஏ. சுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார்.

கச்சாய் கிராமசபையின் ஒவ்வொரு வட்டாரங்கள் தோறும் அந்தந்த வட்டார உறுப்பினரின் உதவியுடன் நிதிசேர்க்க வேண்டுமென்ற கருத்து தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு சைக்கிள்களுடன்

# சைக்கிள் இலக்கத்தை மாற்றும் கருவி பிடிபட்டது

## கைதான மூன்று வாலிபர்களுக்கு 12-ம் திகதி வரை றிமாண்ட்

யாழ்ப்பாணம், செவ்: 7 சயிக்கிள்களை திருடியதாக சந்தேகத்தின்பேரில் நுணாவிலைச் சேர்ந்த 3 வாலிபர்களை சாவகச்சேரி பொலிஸ் சார்ஜன்ட் நந்தசேன கைதுசெய்தார். 7 சைக்கிள்களையும் கைப்பற்றியதோடு சயிக்கிள் இலக்கங்களை மாற்றுவதற்குப் பாவிக்கப்பட்ட ஒரு யந்திரத்தையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர்களான 3 வாலிபர்களையும் பொலிசார் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. ஆசீர்வாதம் முன்னிலையில் ஆஜர் செய்தனர். மாஜிஸ்திரேட் சந்தேக நபர்களை இம்மாதம் 12-ம் தேதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

இத்திருட்டுக் கோஷ்டியினரின் தலைவர் என சந்தேகிக்கப்படும் நாயன்மார்கட்டைச் சேர்ந்த ஒருவரை பொலிசார் தேடிவருகின்றனர். யாழ். நகரில் திருடும் சயிக்கிள்களை, இவர் பிற இடங்களுக்கு கடத்திவருவதாக பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

சாவகச்சேரி பொலிசாரால் கைப்பற்றப்பட்ட சயிக்கிள்கள் யாழ்ப்பாணம் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (மூ. நிரு)

யாழ் விளையாட்டரங்கில் இன்று

## சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்க விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், புதன்: யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கத்தினரது வருடாந்த விழா இன்று மாலை யாழ்ப்பாண விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. பொலிஸ் சாரணர் படை காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை பாதுகாப்பு ஊழியர் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரியைகள் ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி மற்றும் பல கல்லூரிகளின் முதலுதவிப் படையினர் ஆகியோர் கலந்து கொள்ளும் இவ்விழாவில் முதலுதவிப்படையினரது அணிவகுப்பும் முதலுதவிச் சிகிச்சைக் காட்சியும் இடம் பெறும்.

பிரதம விருந்தினராக இலங்கை சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் தலைச் சங்க ஆணையாளரான பேராசிரியர் திரு. மில்றோய் போல் கலந்து கொள்வதுடன் திருமதி மில்றோய் போல் பரிசில்களை வழங்குவார். உத்தியோக ரீதியில் இங்கு விஜயம் செய்துள்ள பேராசிரியர் இம்மாதம் 4ம் திகதி காலை யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலைக்கும் [illegible] கோப்பாய் ஆசிரியபயிற்சிக் கல்லூரிக்கும் விஜயம் செய்து முதலுதவித் தாதிப் படைகளைப் பார்வையிடுவார். 8ம் திகதி சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறும் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் சாரணரின் 3ம் பிரிவினரது வருடாந்த முதலுதவிப் படையினரைப் பார்வையிடுவார்.

பண்டத்தரிப்பு

## பத்திமாகிரி நவநாள்

யாழ்ப்பாணம், புதன்: பண்டத்தரிப்பு அர்ச். பத்திமா நாயகியின் 'கடைசிக் காட்சி விழா' நேற்று முன்தினம் ஆரம்பமாயிது. இவ்விழா இம்மாதம் 13-ம் திகதி திருநாள் பூசையுடனும், திருச்சுருப பவனியுடனும் முடிவடையும்.

இம்முறை நவநாளை முன்னிட்டு அங்கு செல்லும் யாத்திரிகர்களுக்கு தங்கும் வசதிகளையும், பிரயாண வசதிகளையும் கோவிலின் கட்டளைக்குரவர் ஒழுங்கு செய்துள்ளார். (தே நி)

## 'காசரோகம் அன்றும் இன்றும்'

யாழ்ப்பாணம், புதன்: கடந்த காலத்தில் காசரோகம் தீராத வியாதி என மக்கள் நினைத்திருந்தனர். ஆனால் இன்று காசரோகம் மாற்றக் கூடிய வியாதி என்பதை மக்கள் உணர்ந்து விட்டனர்.

சாவகச்சேரியில் காசரோக தடுப்பு இயக்க கொடி விற்பனையை ஆரம்பித்துவைத்த வழக்கறிஞர் திரு. எஸ். கே. திரவியநாயகம் மேற்கண்டவாறு கூறினார். சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. சு. கனகரத்தினம் பேசும்போது 'காசரோகிகளைக் கண்டு பயந்து ஓடிய காலம் மாறி இன்று காசத்தால் பீடிக்கப்பட்டவர்கள் சுகம்பெற்று சமூகத்தில் மற்றவர்களுடன் கூடிக் குலாவுவதைக் காண்கிறோம் என்று கூறினார்.

சாரணர்களும் தொண்டர்களும் நேற்று முன்தினம் சாவகச்சேரி பகுதிகளில் வீடுவீடாகச் சென்று கொடி விற்பனை செய்தனர்.

பஸ் நிலையம் சந்தை மற்றும் முக்கிய இடங்களிலும் கொடிவிற்பனை நடைபெற்றது.

## மீண்டும் தலைவராக தெரிவு

வெள்ளவத்தை, செவ்வாய்: இலங்கை அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் நடப்பு வருடத் தலைவராக திரு இ. அந்தோனிப்பிள்ளை மறுபடியும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கடந்த வேலைநிறுத்த காலங்களிலும் வேறுமுக்கிய பிரச்சினைகளின் போதும் சிறந்த நிதானத்துடனும் துணிச்சலுடனும் சங்கத்தை வழி நடத்தினார் என்று இவருக்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

# “வடக்கு கிழக்கு தெற்கென்ற பேதம் வேண்டாம்”

## உதவி அமைச்சர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செவ்: "சிம்மனந்தலைவர்கள் அடிக்கடி இங்கு விஜயம் செய்யவேண்டும் அப்பொழுதுதான் வடக்கின் பிரச்சினைகளையறியலாம். நம்மிடையே நட்புறவு ஏற்படும், பரஸ்பரம் உதவியும் பெறலாம். இன்று ஊர்காவற்றுறைக்கு ஏற்றிவைக்கும் மின்னொளி அறியாமையை நீக்கும் பேரொளியாக நாடெங்கும் பரவி எங்களிடையேயுள்ள வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமையையுருவாக்கும்"

மேற்கண்டவாறு நீர்ப்பாசன மின்சார நெடுஞ்சாலை அமைச்சின் உதவி அமைச்சர் திரு. சௌரத் சோமரத்ன கூறினார்.

ஊர்காவற்றுறைப் பட்டின சபையில் சபைத் தலைவராலும் அங்கத்தவர்களாலும் நேற்றுமுன்தினமிரவு அளிக்கப்பட்ட இராப்போசனவிருந்தொன்றில் உரையாற்றுகையிலேயே உதவியமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இதற்கு முன்னர் உதவி அமைச்சர் ஊர்காவற்றுறை மின்விநியோகத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், கிழக்கு மேற்கென்றோ வடக்குத் தெற்கென்றோ வேறுபாடின்றி நாம் ஒன்று சேரவேண்டும், நம்மிடையே இனமத வேறுபாடற்ற நேசமனப்பான்மை யுருவாக வேண்டும் அப்பொழுதுதான் ஒருவருக்கொருவர் உதவி செய்யலாம். இதைவிடுத்து வடக்குக்கென்றும், கிழக்குக்கென்றும், தெற்குக்கென்றும் உதவிகேட்பது நியாயமாகாது. நாட்டுநலனை முதலில் கவனத்திற்கொள்ள வேண்டும். இப்பொழுது ஊர்காவற்றுறை மின்னொளி பெறுகிறது. இதையடுத்து நாகதீபம் இவ்வசதியைப் பெறும். அதன் பின்னர் இங்குள்ள ஏனைய பகுதிகளுக்கும் கிடைக்கும்.

இவ்விருந்தில் உரையாற்றிய ஊர்காவற்றுறை ஆகிமன்ற அங்கத்தவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம், அமைச்சரின் நட்புறவைப் பாராட்டியதோடு இழந்த எங்கள் உரிமைகளைத் தாருங்கள் நாங்கள் உங்களுடன் சேர்ந்து ஒத்துழைக்கிறோம் எனக் குறிப்பிட்டார்.

யாழ்நகர மேயர் திரு. அல்பிரட் துரையப்பா பேசுகையில், நாங்கள் உங்களுடன் ஒத்துழைக்கிறோம். எங்கள் தேவைகளுக்கு உதவுங்கள் என உதவியமைச்சரை நோக்கிக்கூறினார்.

இவர்களுக்குப் பதிலளிக்கையிலேயே உதவியமைச்சர் மேற்கண்டவாறு தம் [illegible] வலியுறுத்தினார்.

தீவுப்பகுதி சுதந்திரக் கட்சி ஸ்தாபகர் திரு. பி. கதிரவேலுவும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டார்.

பருத்தித்துறை, ஞாயிறு: மாரடைப்பு சம்பந்தப்பட்ட நோய்களைச் சோதிப்பதற்கான புதிய இயந்திரமொன்றை வல்வைக் கூட்டுறவு வைத்தியசாலை இங்கு தருவித்துள்ளது.

## வ. பொ. இந்தியா சென்றார்

யாழ்ப்பாணம், செவ்: கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசச் செயலாளர் திரு. வ. பொன்னம்பலம் நேற்று இந்தியா பயணமானார். அகில இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வருடாந்த மகாநாட்டில், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதியாக இவர் கலந்து கொள்ளுகிறார். கேரளமாநிலத்திலுள்ள எர்ணாகுளத்தில் நேற்றுத் தொடங்கிய இம்மாநாடு 11ம் திகதி வரை நடைபெறும்.

இம்மாநாட்டில் கலந்து கொள்ளும் திரு. வ. பொன்னம்பலம், தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் நடைபெறும் கூட்டங்களிலும் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 'கவரி வீசிய காவலனுக்கு' முதலிடம்

திருமலை திங்கள்: யாழ் இந்துக்கல்லூரி அகிலஇலங்கை தமிழ்தின விழா நாடகப் போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்றுள்ளது.

'கவரி வீசிய காவலன்' என்பதே இக்கல்லூரியின் முதலிடத்தைப் பெற்ற நாடகமாகும்.

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், புதன்: மன்னாரின் பிரதம கல்வி அதிகாரியாக இருந்த திரு. க. கனகசபாபதி கடந்த மாதம் 15ம் திகதி முதல் [illegible] பிரதம கல்வி [illegible] பெற்றுள்ளார்.

உல்லாசப் பிரயாணிகள் சபை

## 3 ஆண்டுகளில் ஐந்தரைக்கோடி சம்பாதிப்பு

கோட்டை, திங்கள்: இலங்கை உல்லாசப் பிரயாணிகள்சபை அதிகபணத்தைச் சம்பாதித்துள்ளது. 1967ம் ஆண்டிலிருந்து 1970ம் ஆண்டுவரையுள்ள மூன்றாண்டு காலப்பகுதியில் கிட்டத்தட்ட 5 கோடியே 49 லட்சம் ரூபாவை இச்சபை உல்லாசப்பிரயாணிகள் வருகையின்மூலம் சம்பாதித்துள்ளது.

இலங்கை உல்லாசப் பிரயாணிகள் சபை வெளியிட்ட வருடாந்த அறிக்கையில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு உல்லாசப் பிரயாணிகளின் வருகை அண்மைக்காலங்களில் அதிகரித்துள்ளது. அரசாங்கம் உல்லாசப்பிரயாணிகள் வருகைக்கு அளித்த ஊக்கமே இப்பிரயாணிகள் வருகைக்குக் காரணமெனக் கருதப்படுகிறது. 1966-ம் ஆண்டு 11,214 பிரயாணிகள் இலங்கைக்குவந்துள்ளனர். ஆனால் இப்பிரயாணிகள் வருகை 35,630 ஆக 1970 ஆண்டில் அதிகரித்தது. இது வருடம் 33.6 வீதத்தில் உயர்ந்துள்ளது. 1970ம் ஆண்டில் மொத்தம் 46,247 உல்லாசப் பிரயாணிகள் இலங்கை வந்துள்ளனர். இது 1969-ம் ஆண்டைவிட 15 சதம் கூடுதலாகும். 1970ம் ஆண்டு 49.5 வீதமானோர் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்த உல்லாசப்பிரயாணிகளாகும். இந்த ஆண்டு 85,9 வீதத்தினர் விமானமார்க்கமாகவும் 14.1 வீதத்தினர் கடல் மார்க்கமாகவும் இலங்கை வந்துள்ளனர்.

## யாழ். இந்து வெற்றி

யாழ்ப்பாணம், புதன்: யாழ். இந்துக் கல்லூரிக்கும், பரமேஸ்வராக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில், இரு பிரிவுகளிலும் யாழ். இந்துக் கல்லூரி வெற்றி பெற்றது.

மேற்படி இரு கல்லூரிகளின் 'ஏ' பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்ற போட்டியில் யாழ். இந்து 2-0 கோல்களாலும், 'பி' பிரிவுகளிடையே நடைபெற்ற போட்டியில் 5-0 கோல்களாலும் வெற்றி பெற்றது.

யாழ். இந்துக் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு சிநேகபூர்வமான போட்டியில் யாழ். இந்து 'ஏ' பிரிவுக் கோஷ்டி 3-0 கோல்களால் வெற்றி பெற்றது. இவ்விரு கல்லூரிகளின் 'பி' பிரிவுகளிடையே நடைபெற்ற போட்டி வெற்றி தோல்வியின்றி (2-2) முடிவடைந்தது. (தே நி)

உதைபந்தாட்டம்

## வெற்றிதோல்வி இல்லை

யாழ்ப்பாணம், புதன்: யாழ்ப்பாணம் பொலிஸ் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், யாழ்ப்பாணம் 'கிறீன்பீல்ட்' விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. ஆட்டம் முடிவடையும்வரை இரு கோஷ்டிகளும் கோல்கள் எதுவும் போடவில்லை.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. அலெக்ஸிஸ் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (தே நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

